# முறைமை இடர் நேர்வு அளவீடு

## 2025 இன் இரண்டாமரைப்பகுதிக்கான எதிர்பார்ப்புகள்[1]

**பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களம்**

**இலங்கை மத்திய வங்கி**

## நிதியியல் முறைமையின் மீதான ஒட்டுமொத்த நம்பிக்கை

முன்னைய அளவீட்டுடன் ஒப்பிடுகையில், குறுங்காலத்தில் நிதியியல் முறைமையின் மீது பதிலளித்தவர்களின் நம்பிக்கை மேம்பட்டுள்ள அதேவேளை நடுத்தர காலத்தில் இந்நம்பிக்கையானது சிறிதளவு வீழ்ச்சியை எதிர்கொண்டது.




[1]திருத்தப்பட்டது H1: ஆண்டின் முதல் அரைப்பகுதி H2: ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதி

## அவை நிகழுமிடத்து, நிதியியல் முறைமையின் மீது மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இடர்நேர்வுகள்




H1: ஆண்டின் முதல் அரைப்பகுதி H2: ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதி

அதிகரித்துவரும் பூகோள அரசியல் பதற்றங்கள் மற்றும் சவால்மிக்க உலகளாவிய பொருளாதார முன்னோட்டத்திற்கிடையில் 'உலகளாவிய பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்' பாரியளவில் அதிகரித்தன.

முந்தைய இடர்நேர்வு வகையான 'உள்நாட்டு பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்' இரண்டு தனி வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளது: 'இறை மற்றும் அரசு சார்ந்த இடர்நேர்வுகள்' மற்றும் 'பொதுவான உள்நாட்டு பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்'.




## மிகப்பெரிய தாக்க நிகழ்வொன்றுக்கான கருதப்படும் நிகழ்தகவு

பங்கேற்றவர்களிடையே, மிகப்பெரிய எதிர்மறைத் தாக்க நிகழ்வொன்று நிகழக்கூடுமென கருதப்படும் நிகழ்தகவு குறுங்காலத்தில் வீழ்ச்சியடைந்தது எனினும் நடுத்தர காலத்தில் சிறிதளவால் அதிகரித்தது.




H1: ஆண்டின் முதல் அரைப்பகுதி H2: ஆண்டின் இரண்டாம் அரைப்பகுதி

*[1] வெளியிடப்பட்ட முடிவுகள் பதிலளித்தவர்களின் கருத்தை அடிப்படையாகக் கொண்டவை, இவை அவசியமாக மத்திய வங்கியின் நோக்குகளை பிரதிபலிப்பவை அல்ல.*

## தொழில்நுட்பக் குறிப்புகள்

1. இலங்கை மத்திய வங்கியானது முறைமை இடரநேர்வு அளவீட்டை 2017இன் முதலரைப்பகுதியில் அறிமுகப்படுத்தியது. முறைமை இடரநேர்வு அளவீடானது ஆண்டிற்கு இரு முறை பேரண்ட முன்மதியுடைய கண்காணிப்புத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகிறது. இலங்கையின் நிதியியல் முறைமை உறுதித்தன்மை மீதான சந்தை பங்கேற்பாளர்களின் கருத்து மற்றும் நம்பிக்கையைக் கண்காணிப்பதற்காக முறைமை இடரநேர்வு அளவீட்டை இலங்கை மத்திய வங்கி பயன்படுத்துகிறது.

2. இவ்வளவீட்டு மாதிரியானது உரிமம்பெற்ற வங்கிகள், உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள், ஒரு சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனி, காப்புறுதி கம்பனிகள், கூறு நம்பிக்கை முகாமைத்துவக் கம்பனிகள், எல்லைக்கடன் வசதியளிப்பவர்கள் மற்றும் ஒப்புறுதியளிப்பவர்கள், பங்குத்தரகுக் கம்பனிகள், உரிமம்பெற்ற நுண்பாகநிதிக் கம்பனிகள் மற்றும் தரமிடல் முகவராண்மைகள் என்பவற்றின் இடரநேர்வு உத்தியோகத்தர்களை உள்ளடக்குக்கின்றது.

3. 2025 இரண்டாமரைப்பகுதி அளவீடானது 27 யூன் 2025 மற்றும் 20 யூலை 2025 இற்கிடையில் மேற்கொள்ளப்பட்டது. 146 நிறுவனங்கள் அளவீட்டில் பங்கேற்றன.

4. அளவீட்டில் பயன்படுத்தப்பட்ட இடர்நேர்வுகளின் வகைப்படுத்தல் 46 உபஇடர்நேர்வுகளைக் கொண்ட 7 முக்கிய இடர்நேர்வு வகைகளை உள்ளடக்கியுள்ளது. இம்முக்கிய இடர்நேர்வு வகைகளானவை,

   அ. உலகளாவிய பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்
   ஆ. இறை மற்றும் அரசு சார்ந்த இடர்நேர்வுகள்
   இ. பொதுவான உள்நாட்டு பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்
   ஈ. நிதியியல் உட்கட்டமைப்பு தொடர்பான இடர்நேர்வுகள்
   உ. நிதியியல் சந்தை இடர்நேர்வுகள்
   ஊ. நிதியியல் நிறுவனங்கள் தொடர்பான இடர்நேர்வுகள்
   எ. பொது இடர்நேர்வுகள்

5. முந்தைய இடர்நேர்வு வகையான 'உள்நாட்டு பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்' 2025 இரண்டாமரைப்பகுதி அளவீட்டு சுற்றிலிருந்து ‘இறை மற்றும் அரசு சார்ந்த இடர்நேர்வுகள்’ மற்றும் 'பொதுவான உள்நாட்டு பேரண்டப்பொருளாதார இடர்நேர்வுகள்' எனும் இரு வகைகளாக மீள்-வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த இரண்டு வகைகளுக்குள் மூன்று புதிய உப இடரநேர்வுகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

6. ‘நிதியியல் முறைமை உறுதித்தன்மை மீதான ஒட்டுமொத்த நம்பிக்கையின்’ தேறிய சதவீத இருப்பானது பதில்களை ‘முழுமையான நம்பிக்கை’ க்கு 1, ‘மிகுந்த நம்பிக்கை’ க்கு 0.5, ‘ஓரளவு நம்பிக்கை’ க்கு 0, ‘மிகுந்த நம்பிக்கையின்மை’ க்கு -0.5, ‘முழுமையான நம்பிக்கையின்மை’ க்கு -1 என நிறையளிக்கப்பட்டு கணிக்கப்படுகிறது.

7. ‘மிகப்பெரிய தாக்க நிகழ்வொன்றுக்கான கருதப்படும் நிகழ்தகவின்’ தேறிய சதவீத இருப்பானது பதில்களை ‘மிக உயர்வானது’ க்கு 1, ‘உயர்வானது’ க்கு 0.5, ‘நடுநிலை’ க்கு 0, ‘குறைவு’ க்கு -0.5, ‘மிகக் குறைவு’ க்கு -1 என நிறையளிக்கப்பட்டு கணிக்கப்படுகிறது.